# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு

## மாதாந்தப்பரீட்சை ஐப்பசி – 2018

**தரம் -06** **கணிதம்** **நேரம்:40நிமிடம்**

**பகுதி -I**

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01 செவ்வகமொன்றின் நீளம் 8cm அகலம் 4cm எனின் நீளம் அகலத்திற்கு இடையிலான விகிதத்தை எழுதுக.

02 இடைவெளியை நிரப்புக

$2 : 5 = ___ : 15$

03 எளிய வடிவில் 9 : 15 ஐ தருக?

04 வாகனம் ஒன்று 2 மணித்தியாலங்களில் 80km தூரம் செல்லும் எனின் 4 மணித்தியாலங்களில் செல்லும் தூரம் யாது?

05  இவ் உரு 8 ஐ குறிக்கின்றது எனின்  இதை குறிக்கும் எண்ணிக்கை யாது?

06 இடைவெளி நிரப்புக.

| எண்ணிக்கை | வரவுக்குறி |
|---|---|
| 7 | ........................................ |
| ................................ |  |

07 4kg 500g ஐ கிராமில் தருக?

08 $x = 5$ ஆகும் போது $(x + 8)$ இன் பெறுமானம் யாது?

09 நாள் ஒன்றில் தந்தையின் சம்பளம் ரூ 750 உம் தாயின் சம்பளம் ரூ $x$ எனின் இருவரினதும் மொத்த சம்பளத்தை அட்சரகணித கோவையில் காட்டுக.

10 தரப்பட்டுள்ள எண்களில் 675, 908, 996 இரண்டால் மீதியின்றி வகுபடும் எண்களை எழுதுக.

(10x2=20புள்ளிகள்)

**பகுதி-II**

01)a)

I. மூன்று பதினைந்திற்கு என்ற விகிதத்தை இலக்கத்தில் எழுதுக.

II. நீர் எழுதிய விகிதத்தை எளிய வடிவில் தருக.

b)




I. A, B பாத்திரங்களில் உள்ள நீரின் அளவை விகிதத்தில் எழுதுக?

II. A பாத்திரத்தில் B ஐ விட எவ்வளவு நீர் மேலதிகமாக உள்ளது?

(2+2+3+3=10புள்ளிகள்)

02) தரம் 6 வகுப்பில் உள்ள மாணவர்கள் வரும் வாகனம் பற்றிய விபரம் பின்வருமாறு.

| வாகனவகை | வரவுக்குறி | எண்ணிக்கை |
|---|---|---|
| கார் | 卌 | 5 |
| உந்துருளி | .......... | 15 |
| ஈருருளி | 卌 卌 | ......... |
| வான் | .......... | 5 |

1. அட்டவணையில் உள்ள இடைவெளியை நிரப்புக?
2. கூடுதலான மாணவர்கள் வரும் வாகனம் யாது?
3. சம எண்ணிக்கையான மாணவர்கள் எவ்வாகனங்களில் வருகை தருகின்றனர்?

(6+2+2புள்ளிகள்)

03) தரம் 6 இல் உள்ள 3 பிரிவுகளின் மாணவர்களின் விபரம் படவரைபு மூலம் தரப்பட்டுள்ளது.

| தரம் | |
|---|---|
| 6A | □ □ □ □ ▯ |
| 6B | □ □ □ □ |
| 6C | □ □ □ □ □ |

□ என்பது 4ஐ குறிக்கின்றது

1. 6A பிரிவில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை காண்க?
2. 6B பிரிவில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை காண்க?
3. 6C பிரிவில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை காண்க?
4. கூடுதலான மாணவர்கள் உள்ள பிரிவு எது?
5. மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(2×5=10புள்ளிகள்)